**Date : 25.11.2021.**

**O.S. No.59/2015**

**பி.வா.சா.1 திரு.எஸ்.சோமசுந்தரம்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் சுப்ரமணி. எனது தயார் பெயர் வெள்ளைத்தாய் என்றால் சரிதான். எனது பெற்றோருக்கு வாதி மற்றும் பிரதிவாதிகள் அனைவரும் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனாருக்கு முன்பே எனது தாயார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 10.11.2013 அன்று காலமாகிவிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது பெற்றோருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தையுடன் பிறந்த சகோதரிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்தாகும். எனது எதிர்உரையில் மேற்சொன்ன விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனது அத்தைகள் பங்கு கேட்டால் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். எனக்கு 3 அத்தைகள். அவர்கள் 3 பேரும் இறந்து விட்டார்கள். அவர்களுக்கு வாரிசுகள் இருக்கிறார்கள். மேற்சொன்ன விவரத்தையும் எனது எதிர்வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தற்போது கூட எனது அத்தைகளின் பேரன்கள், சொத்தில் பாகம் வேண்டும் என்று கேட்டுவருகிறார்கள். ஆனால் இதுவரை எந்த வழக்கறிஞர் அறிவிப்போ, அல்லது காவல்நிலையத்தில் புகாரோ கொடுக்கவில்லை. அத்தையின் பேரன்கள் சொத்தில் பாகம் கேட்பதாக நான் எனது எதிர்உரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிக்கும் பாகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தந்தை நடத்தி வந்த எம்.எம்.ஆர். ஆடியோஸ் மூலம் மற்ற வாரிசுதாரர்கள் பயன் அடைந்து தொழில் செய்து நல்ல முறையில் இருந்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்துக்களை நான் தான் அபிவிருத்தி செய்து உரிமை பெற்று அடைந்து அனுபவித்து வருகிறேன் என்று எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன்

என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது. தாவா சொத்தில் 1985ம் வருடத்தில் இருந்து எனது தந்தையின் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் மா, தென்னை, கொய்யா, சப்போட்டா போன்றவைகளை வைத்துள்ளேன். எனது பாட்டியின் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் மா, மற்றும் கொட்டை முந்திரி ஆகியவற்றை வைத்துள்ளேன். இரண்டு இடங்களிலும், 2 கிணறு நான் தான் வெட்டினேன். பாட்டி பெயரில் உள்ள பட்டா நிலத்தில் 2 போர் போட்டுள்ளேன். அனைத்து மரங்களையும் நான் தான் வைத்தேன். மின்மோட்டார் எதுவும் இல்லை, ஆயில் மோட்டார் தான் பயன்படுத்தி வருகிறேன். அனைத்து மரங்களையும் நான் தான் வைத்தேன் என்று கூறுவதற்கு ஆவண ஆதாரம் எதுவும் இல்லை, நான் யாரிடமும் கடன் வாங்கவில்லை, என்னுடைய வருமானத்தில் இருந்து சிறுகசிறுக வைத்தேன். என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் எனது மனைவியின் நகைகளை அடமானம் வைத்து அபிவிருத்தி செய்தேன் என்று கூறியுள்ளதற்கு ஆதாரமாக என்னிடம் ரசீது உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேன். எனது மனைவியின் நகைகளை கூட்டுறவு வங்கி மற்றும் கனரா வங்கியில் அடமானம் வைத்துள்ளேன். எந்த வருடம் என்று நினைவில்லை. ஆவணத்தை பார்த்தால் கூறமுடியும். எனது தந்தை எம்.எம்.ஆர் ஆடியோவை மட்டும் தான் கவனித்து வந்தார். நான் விவசாயத்தை கவனித்து வந்தேன். எனக்கு விவசாய வருமானம் மட்டும் தான் உள்ளது என்றும், வேறு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், தாவா சொத்துக்களை நான் அபிவிருத்தி செய்யவில்லை என்றும், எனது தந்தை தான் அபிவிருத்தி செய்தார் என்றால் சரியல்ல. விவசாய நிலத்தை அபிவிருத்தி செய்யும் போது காட்டு மாட்டிற்கு பயந்து நான் கிணற்றில் குதித்து உயிர் பிழைத்தேன். அது மாதிரி எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை நடத்தி வந்த எம்.எம்.ஆர்.

ஆடியோசை எனது சகோதரர்கள் பலஊர்களில் நடத்தி வந்தார்கள். தற்போது எம்.எம்.ஆர். ஆடியோஸ் மதுரை மற்றும் சென்னையில் இயங்கி வருகிறது. மேற்குறிப்பிட்டவாறு எம்.எம்.ஆர் ஆடியோஸ் இயங்குகிறது என்று காட்டுவதற்கு நான் ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மதுரையில் எம்.எம்.ஆர். ஆடியோஸ் இயங்கி வரும் இடம் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டதா என்றால் அவர் அதில் ஒத்திக்கு இருந்தார். அந்த இடத்தில் வைத்து தான் எனது தகப்பனார் காலமானார். நான் கூறுவது தவறு என்றும், தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எனது தந்தைக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மற்றும் எனது சகோதரர்கள் அனைவரும் வாதி கேட்ட பங்கை கொடுக்க தவறி விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அறிவிப்பு அனுப்பி இருந்தார் என்று சொன்னால், 1 முதல் 10 பிரதிவாதிகளுக்கு எனது முகவரிக்கே அறிவிப்பு அனுப்பியிருந்தார். எனது முகவரி என்பது தாவா முதல் இலக்க சொத்து. அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அனுப்பவில்லை என்றால் சரிதான். நான் பதிலும் கொடுக்காமல், சொத்தையும் பிரித்துக் கொடுக்காத காரணத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைவரும் நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்றும், வழக்கிற்காக தனித்தனியாக இருப்பது போல் கட்சி ஆடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. 1ம் இலக்க சொத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட இரும்பு பெட்டி உள்ளது என்றால் சரியல்ல. எனது தாயாரின் நகைகள் யார் வசம் உள்ளது என்று எனக்கு தெரியாது, எனது தந்தை தான் வைத்திருந்தார். எனது தாயார் எவ்வளவு நகை வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. தாவா 1ம் இலக்க சொத்தில் உள்ள இரும்பு பெட்டியில் தான் அவரது நகைகள் உள்ளது என்று

சொன்னால் சரியல்ல. தாவா 1ம் இலக்க சொத்தில், நானும், எனது சகோதரரான முத்துக்குமரேசனும் குடியிருக்கிறோம் என்று சொன்னால் சரிதான். நானும், எனது சகோதரரும் 2 நாய்கள் வளர்த்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் மட்டும் தான் வளர்த்து வருகிறேன். எனது சகோதரியான வாதி, சாமி கும்பிட வீட்டிற்கு வந்தால், நாயை விட்டு விரட்டிவிடுவோம் என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது சகோதரரும் நாய்கள் வளர்த்து வருகிறோம் என்றும், இருவருமே நாய்கள் வைத்து அவரை விரட்டி விடுகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரிக்கு சொத்தில் பாகம் கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் நாங்கள் இருக்கிறோம் என்றால் சரியல்ல. வாதிக்கு அவர் கேட்க கூடிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

***10 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.***

***1 முதல் 4, 6, 7, 9 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜர் இல்லை.***

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

sd/-G.Vijaya,

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.